நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.430 /2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | வனவாசி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 27 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 03–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.21 PM

1. நான் தற்போது வனவாசியில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு நானும் ஈஸ்வரன் என்பவரும் புதுப்பேட்டை அருகே சென்றபோது அங்கு வந்த எதிரி எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார். கூட்டம் கூடி விட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ

ஒருவர் என்னை கீழே தள்ளி அடித்துவிட்டார். கூட்டத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது புகார் கொடுத்துவிட்டேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **(புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 10.11.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் வேலையை முடித்துவிட்டு வனவாசியில் இருந்து சாணாரப்பட்டி ரோட்டில் விநாயகர் கோவில் அருகே இருச்சக்கர வாகனத்தில் நானும் என்னுடைய நண்பர் ஈஸ்வரன் இருவரும் சென்றுக்கொண்டிருந்தபோது எம்ஜிஆர் காலனியை சேர்ந்தவர்கள் சமுதாய கூடத்திற்கு கூட்டமாக எதிரிகள் வந்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் வண்டியை ஓரமாக நிறுத்தி ஒதுங்கி நின்றேன் என்றால் சரியல்ல.
2. அங்கிருந்தவர்கள் என்னை போக சொன்னதால் நான் வண்டியை எடுத்தபோது எதிரி என்னை தடுத்துநிறுத்தி நாங்கள் ஊர்வலம் போகும்போது கொஞ்சநேரம் நிற்க முடியாதா என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி கையால் என் கன்னத்திலும் தலையிலும் மாறிமாறி அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக போலீசார் விசாரணையிலும் என்னுடைய புாகரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. எதிரி என்னுடைய நண்பர் என்றால் சரிதான். நான் தற்போது எதிரியுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதனால் எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.30PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.430 /2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கடாஜலம் |
| தந்தை / கணவர் பெயர் | : | காவேரி |
| கிராமம் | : | கரட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 03–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.31 PM

1. நான் தற்போது கரட்டுரில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ யார் அடித்தார்கள் என்று தெரியாது. எதிரியும் எனக்கு தெரியாது. சம்பவதன்று நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 10.11.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் அ.சா.1 மற்றும் அவருடைய நண்பர் ஈஸ்வரன் என்பவரும் வனவாசியில் இருந்து சாணாரப்பட்டி ரோட்டில் விநாயகர் கோவில் அருகே இருச்சக்கர வாகனத்தில் அ.சா.1 ம் அவருடைய நண்பர் ஈஸ்வரன் இருவரும் சென்றுக்கொண்டிருந்தபோது எம்ஜிஆர் காலனியை சேர்ந்தவர்கள் சமுதாய கூடத்திற்கு கூட்டமாக வந்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அ.சா.1 வண்டியை ஓரமாக நிறுத்தி ஒதுங்கி நின்றார் என்றால் சரியல்ல.
2. அங்கிருந்தவர்கள் அ.சா.1 ஐ போக சொன்னதால் அ.சா.1 அவருடைய வண்டியை எடுத்தபோது எதிரி அ.சா.1 ஐ தடுத்துநிறுத்தி நாங்கள் ஊர்வலம் போகும்போது கொஞ்சநேரம் நிற்க முடியாதா என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி கையால் அ.சா.1 ன் கண்ணத்திலும் தலையிலும் மாறிமாறி அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. எதிரி என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அ.சா.1 தற்போது எதிரியுடன் சமரசமாக சென்றுவிட்டார் என்றால் சரிதான். அதனால் எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.35PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**